DR. H. V. HANDE : Is the Hon. Minister aware of the fact that in the last three or four years where there were previously Telugu medium in Government Arts College (there was Kannada section also there as second language) progressively the seats for these languages, have been reduced, even though it is of course stipulated that for this, a certain minimum number should come in? Will the Government take into consideration the fate of large number of students and their parents who are likely to be transferred to Madras and those who had been here even before the division of this State? Will the Government view this question sympathetically and give instruction to the officers, not to view this question on the rule of law but more sympathetically?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்கு ஒரு தனிக் கேள்வியை நண்பர் ஹாண்டே அவர்கள் போடுவார்களானால் கல்வி அமைச்சரே விவரமான பதிலை அளிக்க முடியும்.

திரு. கே. விநாயகம் : நமது மாநிலத்தில் இருக்கிற பிறமொழி சிறுபான்மையோருக்கு போதிய அளவு பாதுகாப்புத் தரவேண்டும் என்பதில் அபிப்பிராய பேதம் இல்லை. ஆயினும் நமது மாநிலத்திற்கு அண்டையில் இருக்கிற பகுதிகளில் மிக அதிக அளவில் சிறுபான்மையினராக வாழும் தமிழர்களுக்கு—நகரி, பத்தூர், திருப்பதி, திருமலை போன்ற இடங்களில் அதிகமாகத் தமிழர்கள் வாழ்ந்தாலும் இவர்கள் தமிழே படிக்கக் கூடாது என்ற விதியை அந்த அந்த மாநில சர்க்கார் போட்டிருப்பது தெரியுமா? நாம் எப்படி பிற மொழி சிறுபான்மையோருக்கு என்ன என்ன வசதிகளை அளிக்கிறோமோ அது போலவே அண்டை மாநிலங்களில் உள்ள நம் மொழியினருக்கு அந்த அந்த அரசாங்கம் போதிய பாதுகாப்புகளைத் தரவேண்டும் என்பதை இந்த அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சிறுபான்மை மொழி ஆணையர் முன்பு இதுபற்றியும் பேசப்பட்டு இருக்கிறது. ஏனைய மாநிலங்களிலும் இதுபோன்ற சலுகைகளை நம்முடைய மொழி சிறுபான்மையோருக்கு அளிக்க அவர்களது இசைவைப் பெற அரசு எழுதியிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தமிழைத் தவிர கன்னடம் பேசும் மக்கள் தாளவாடி பிர்க்காவில் மிக அதிகமாக இருப்பதனால் அங்கே கன்னட பள்ளிக்கூடங்களை அதிகமாக்க சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் குழுவின விவாதத்தில் அளிக்கப்பட்ட பரிந்துரைகளின் வரிசையில் தொடக்கப்பள்ளி முதல் கல்லூரி வரையில் கன்னட மொழியில் படிப்பதற்கு வசதி செய்வதுபற்றிய பரிந்துரை இருக்கிறது.

செங்கற்பட்டு நகரில் ஜாதிப் பெயர்களையுடைய தெருக்கள்

* 362 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969-ஆம் ஆண்டு, ஜூலை மாதம், செங்கல்பட்டு நகராட்சிக் கூட்டத்தில், நகரில் ஜாதிகளைக் குறிக்கும் தெருப் பெயர்களை நீக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றியுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: செங்கற்பட்டு நகராட்சியில் உள்ள சாதிப் பெயருடன் கூடிய தெருக்களைப் பொறுத்த வரையில் அவற்றில் நபர்களின் பெயர்களை மட்டும் நிறுத்திக் கொண்டு சாதிப் பெயர்களை நீக்க ஒப்பளிப்பு வழங்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டு, 30---6---1969 அன்று நடந்த தனது கூட்டத்தில் செங்கற்பட்டு நகராட்சி மன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

திரு. என். கிட்டப்பா: செங்கற்பட்டு நகராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்போல தமிழகத்தில் வேறு எந்த, எந்த நகராட்சிகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சாதிப்பெயர்களை நீக்க வேண்டும் என்று மதுரை, இராமநாதபுரம், கிருஷ்ணகிரி, தாம்பரம் போன்ற இடங்களில் இருந்தும் தீர்மானம் போடப்பட்டு வந்து அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. வேறு சில இடங்களுக்கு அனுமதி வழங்கவும் யோசிக்கப்பட்டு வருகிறது.

Harijan Colony at Pullarambakkam

*266 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the construction of houses in the Harijan colony at Pullarambakkam, Tiruvellore taluk, Chingleput district started during the previous Ministry has been completed; and

(b) if not, the reasons for the same?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) புள்ளரம்பாக்கம் கிராமத்திலுள்ள எஸ. விஜயன் என்பவரிடம் வீடுகள் கட்டும் வேலை ஒப்படைக்கப்பட்டது. செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரால் மீண்டும் மீண்டும் உத்தரவுகளும், கட்டளைகளும் பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வேலையை முடிப்பதற்கு அவர் உண்மையாக முயற்சிகள் எடுத்துக்கொள்ளவில்லை. அவ்வேலையை விரைந்து முடிக்கத் தேவையான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்து வருகிறார்.

DR. H. V. HANDE: Is it not a fact that the beneficiaries of these 10 huts received an amount of Rs. 10,000 and odd as loan and the Special Tahsildar instructed that this amount should be paid to the contractor after the contractor had built the houses? In view of the fact that the money has been paid, and the houses have not been constructed, will the Hon. Minister give an assurance asking these people not to pay loans back till the houses are properly built by Governmental Departments?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படித் தான் நன்மை அடைகிறவர்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் கொடுத்த பணத்தையும் அவர் வாங்கிக்கொண்டிருக்கிறார். இதுவரையிலும் 11,156 ரூபாய் வாங்கியிருக்கிறார். இன்னும் 8 ஆயிரம் சொச்சம் கொடுத்தால் அவரே கட்டிக்கொடுப்பதாகச் சொல்கிறார், மாவட்ட ஆட்சியாளர் இவற்றைக் கட்டி முடிக்க எல்லா நடவடிக்கையும் எடுத்து வருகிறார். மேற்கொண்டு பணத்தைக் கொடுத்து இவரையே கட்டச் சொல்லலாம். அல்லது வேறு யாரையாவது கட்டச் சொல்லலாம்.